**செ. கு. எண்**:06 **நாள்**:05.01.2013

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 5.1.2013

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்பெரும்புதூரைச் சேர்ந்த திரு. வேலு என்பவர் 23.12.2012 அன்று குன்றத்தூர் அருகில் நடந்து சென்று கொண்டிருந்த போது அரசு பேருந்து மோதியதில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டம், ராணிப்பேட்டை, நாவல்பூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. அண்ணாமலை என்பவரின் மகன் சுகுமார் 26.12.2012 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், திம்மசமுத்திரம் கிராமம் அருகே சாலையைக் கடக்க நின்றிருந்த போது, காஞ்சிபுரத்திலிருந்து சென்னைக்கு வந்து கொண்டிருந்த அரசு பேருந்து மோதியதில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரமடைந்தேன்.

இந்த சாலை விபத்துகளில் அகால மரணமடைந்த வேலு மற்றும் சுகுமார் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்த வேலு மற்றும் சுகுமார் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**